<u>அமிர்தஸரில் எனது வேட்பு மனு</u>

**அருண் ஜேட்லி**
***(மாநிலங்களவை எதிர்கட்சி தலைவர்)***

என்னை அமிர்தஸர் நாடாளுமன்றத் தொகுதி வேட்பாளராக அறிவித்த பா.ஜ.க. கட்சிக்கு நான் மிகவும் கடமைபட்டுள்ளேன்.

1970-ஆம் ஆண்டில் மிக இளம் வயதிலேயே நான் ஒரு அரசியல் தொண்டனாக மாறிவிட்டேன். அப்போது நான் ஏ.பி.வி.பி. தொண்டனாக இருந்தேன். என் கல்லூரியிலும் அதன் பிறகு தில்லி பல்கலைக்கழகத்திலும் வெற்றிகரமாகத் தேர்தல்களில் போட்டியிட்டேன். என் வாழ்க்கையின் விசேஷத் தருணமாக அமைந்தது, ஊழலுக்கு எதிரான போராட்டத்திலும் நெருக்கடி நிலை சட்டப் பிரகடனத்துக்கு எதிரான ஜே.பி. இயக்கத்தில் பங்கேற்றதும்தான். நெருக்கடி நிலை அறிவிக்கப்பட்ட முதல் நாளிலிருந்தே அதை எதிர்த்தவன் நான், அதைத் தொடர்ந்து அடுத்த பத்தொன்பது மாத காலம் தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் சிறையில் கழித்தேன். இந்த காலகட்டத்தில்தான் எனது சித்தாந்தம் தொடர்பான சிந்தனை வலுப்பட்டது.

1980-ஆம் ஆண்டில் பா.ஜ.க. தொடங்கப்பட்ட நாளிலிருந்து நான் அக் கட்சியின் உறுப்பினராக இருந்து வருகிறேன். அந்த வருடத்தில்தான் நான் ஏ.பி.வி.பி.யிலிருந்து பா.ஜ..க.வுக்கு வந்தேன். அப்போது எனக்கு முழு நேர அரசியல்வாதியாக மாறும் எண்ணம் இருக்கவில்லை. 1977ஆம் ஆண்டில், நான் வழக்கறிஞராகப் பணியாற்றத் தொடங்கினேன். 1990-ஆம் ஆண்டில் நான் மூத்த வழக்கறிஞராக நியமிக்கப்பட்டேன். என்து தொழில் வளர்ந்து வந்த அதே சமயத்தில் பா.ஜ.க.வில் எனது ஈடுபாடும் வளர்ந்து வந்தது. நான் ஒரு வழக்கறிஞராகவும் ஒரு தொண்டராகவும் ஒரே சமயத்தில் பணி புரிய முடியும் என்று நினைத்திருந்தேன். ஒரு முழுநேர அரசியல்வாதியாக நான் என்னைப் பார்த்துக்கொண்டதேயில்லை. 1980லிருந்தே பா.ஜ.க.வின் அரசியல் பிரச்சாரத் திட்டங்களை ஒருங்கிணைத்து நடத்துவதில் ஈடுபட்டு வந்தேன். நான் அந்தக் கட்சியின் தேசிய செயற்குழு உறுப்பினர் மற்றும் அதன் தேசிய செய்தி தொடர்பாளர்களில் ஒருவனான இருந்தேன். 1999 –ஆம் ஆண்டில் என் கட்சித் தலைவர்கள் ஸ்ரீ அடல் பிஹாரி வாஜ்பாய் மற்றும் ஸ்ரீ அத்வானி அவர்களால் தேசிய ஜனநாயக கூட்டணி அரசில் அமைச்சராக பொறுப்பேற்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டேன். அப்போது நான் ஒரு நாடாளுமன்ற உறுப்பினராககூட இல்லை. அந்த அரசில் இணைந்த பின் எம்.பி.யாவதற்காக அளிக்கப்படும் அவகாசமான ஆறே மாதங்களுக்குள் குஜராத்திலிருந்து மாநிலங்களவை உறுப்பினாராக தேர்ந்தெடுக்கப்பட்டேன். அப்போதிலிருந்தே நான் நாடாளுமன்றத்தில் பணிபுரிந்து வருகிறேன்: ஒரு அமைச்சராக, கட்சியின் பொது செயலாளர் அல்லது மாநிலங்களவையின் எதிர்கட்சி தலைவர் இப்படி எந்தப் பதவியில் நான் இருந்தாலும் என் கட்சி என்னை எப்போதுமே தேர்வு பிரச்சாரங்களில் உதவ வேண்டும் என்று எதிர்பார்த்தது. நான் தேர்தல் ஒருங்கிணைப்பு பணிகளில் ஈடுபட்டு வரும் காரணத்தால், இதுவரை தேர்தல்களில்

போட்டியிடும் வாய்ப்பு எனக்குக் கிடைத்ததில்லை.

இந்த முறை கட்சி, நான் மிகவும் நேசிக்கும் அமிர்தசரஸ் நகரில் வேட்பாளராக என்னை அறிவித்துள்ளது. அமிர்தசரஸ் இந்தியாவின் முக்கிய புனித ஸ்தலங்களில் ஒன்று. இந்த நகர் இந்திய கலாசாரத்தின் ஒரு அடையாளச் சின்னமாகவும் இருந்து வருகிறது. வட இந்தியாவின் வர்த்தக நடவடிக்கைகளின் முக்கிய மையமாகவும் இருந்து வந்தது. நான் எனது குழந்தைப் பருவத்திலிருந்தே இந்த நகருக்கு அடிக்கடி சென்று வந்துள்ளதால் இதன் மீது எனக்குத் தனிப்பட்ட நாட்டம் இருந்து வருகிறது. என் அம்மாவின் சொந்த ஊர் இது. அவர் பிறந்து வளர்ந்தது அமிர்தசரஸில்தான். என் சகோதரி அங்குதான் பிறந்தார். என் மனைவி ஜம்மு&காஷ்மீரைச் சேர்ந்தவரைச் சேர்ந்தவர் என்றாலும் சிறந்த மருத்துவ வசதிகள் காரணமாக இங்குதான் பிறந்தார். இந்த ஊர் எனது தாத்தா பாட்டி ஊர் என்பதால், என் குழந்தைப் பருவத்திலிருந்தே அடிக்கடி அங்கு செல்வதுண்டு. இந்த நகரில் நடைபெற்ற அனைத்து முக்கிய அரசியல் பிரச்சாரங்களிலும் நான் பங்கேற்றுள்ளேன். இந்த நகரில் கிடைக்கும் நல்ல உணவு வகைகளை விரும்புபவன் என்ற காரணமாகவும் இதன் மீது எனது நேசம் வலுப்பட்டது. வேறு எந்த இடத்தையும்விட இந்த நகரின் உணவு அருமையாக இருக்கும். அமிர்தசரஸில் உள்ள எனது நண்பர்கள், கட்சி உறுப்பினர்கள் மற்றும் எனது உறவினர்களிடமிருந்து வாழ்த்துகள் குவிந்த வண்ணம் உள்ளது. அந்த நகரில் நீண்ட காலம் வசிக்கும் வாய்ப்பு கிடைக்கும் தருணத்திற்காக ஆவலுடன் காத்திருக்கிறேன்.

என் மனதைத் தயார்படுத்திக்கொள்ள எனக்கு உதவிய என் நண்பர் நவ் ஜோத் சிங் சித்துவுக்கு நான் மிகவும் கடமைப்பட்டுள்ளேன். எனக்கும் நவ்ஜோத் சிங்குக்கும் உள்ள உறவு அரசியலுக்கு அப்பாற்பட்டது. அவருடைய இடத்தில் வேறு யாரையுமே என்னால் கற்பனை செய்துகூட பார்க்க முடியாது. கடந்த சில நாட்களாக அவர் என்னிடம் அமிர்தசரஸ் போய் தேர்தலில் போட்டியிட வேண்டும் என்று வற்புறுத்தி வந்தார். நான் அவரிடம் நீங்கள் அமிர்தசரஸில் அல்லது குருக்ஷேத்ரா மற்றும் மேற்கு தில்லி தொகுதிகள் உட்பட ஏதாவது ஒரு தொகுதியில் போட்டியிடுமாறு தொடர்ந்து வற்புறுத்தி வந்தேன். கட்சித் தலைவர் இந்தக் கோரிக்கையை வலியுறுத்தினார். பெருந்தன்மை நிறைந்த அவர் தனக்கு தனிப்பட்ட அல்லது அரசியல் பதவிகளோ அல்லது லாபங்களோ தேவையில்லை என்பதை மிகவும் தெளிவாக கூறிவிட்டார். அவரது பெருமையும் கண்ணியமும் அவரது செயல்களில் வெளிப்படுகிறது. இது அரசியலில் நம்மைப் போன்ற பலருக்கு ஒரு பாடமாக அமைந்துள்ளது. கிரிக்கெட்டில் அவர் ஒரு மிகச் சிறந்த பேட்ஸ்மேன். இந்த முறை அவர் என்னை ஒரு பந்துவீச்சாளராக வீழ்த்திவிட்டார்.

******